சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No.14/2016

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் நாள் DW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. ராதாகிருஷ்ணன் த/பெ. முருகேசன் | நாள்.23.01.2025 |
| வயது. 65 | வட்டம் |
| கிராமம். ராமாபுரம் | மாவட்டம். |

**<u>பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1. நான் வழக்கில் பிரதிவாதி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான்.

**<u>3வது வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. 2, 3 பிரதிவாதிகள் என் சகோதரிகள் என்றால் சரிதான். 4 முதல் 6 வாதிகள் பவானியின் வாரிசுகள் என்றால் சரிதான். என் தாயார் பெயர் பட்டம்மாள் என்றால் சரிதான். பட்டம்மாளின் கணவர் பெயர் சுப்புராயன் என்றால் சரிதான். சுப்புராயன், பட்டம்மாள் ஆகியோர் மலேசியாவில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். என் தாயாரின் சகோதரர்கள் சுப்பிரமணியன், முத்துசாமி மற்றும் ஆறுமுகம் என்றால் சரிதான். என் தாயார் பிறந்து வளர்ந்தது அனைத்தும் மலேசியா என்றால் சரிதான். வழக்கு கிராமத்திற்கு திருமணத்திற்காக 1ம் வாதி வந்தார் என்றால் சரிதான். என் தகப்பனார், என் தாயாருக்கு தாய் மாமன் என்றால் சரிதான். என் தாயாரை அவரின் தாய் மாமனுக்கு திருமணம் முடித்து வைப்பதற்காகத்தான் மலேசியாவில் இருந்து அழைத்து வரப்பட்டார் என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் என்

தாயாருக்கு திருமணம் ஆன பின்புதான் கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான். சுப்புராயன் மற்றும் பட்டம்மாளுக்கு ஒரே மகள் என் தாயார் தான்.

3. மலேசியாவில் இருந்து என் தாயார் வந்ததால் நிறைய சீர் வரிசைகளுடன்தான் என் தாயாருக்கு திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. வழக்குச் சொத்துக்களை என் தாயாரின் சீதனப் பொருட்களை விற்று தான் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் ஆயில் இன்ஜின் மெக்கானிக்காக வேலை பார்த்துவந்தார். என் தகப்பனார் அவ்வாறு வேலை பார்த்தற்கு ஆவணங்கள் உள்ளது. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய இயலும். என் தகப்பனார் எனக்கு 3.10.2005 தேதியில் எனக்கு உயில் எழுதி வைத்தார். என் தந்தை 8.8.2007ல் இறந்தார். என் தகப்பனார் எனக்கு உயில் எழுதிய விவரம் எழுதிய தேதியில் எனக்கு தெரியாது. 2007ல்தான் தெரியும். என் தகப்பனார் 2007ல் உயில் பற்றிய விவரத்தை என்னிடம் கூறினார்.

4. உயில் வாசகங்களை யார் கூறினார்கள் என்றும், அந்த உயிலை யார் எழுதினார்கள் என்றும் எனக்கு ஞாபகம் இல்லை. உயில் எழுதும்போது யார் யார் இருந்தார்கள் என்று என் தகப்பனார் என்னிடம் கூறினாரா என்றால் முத்தாலு மற்றும் ரங்கசாமி இருந்ததாக என் தகப்பனார் என்னிடம் கூறினார். உயிலை நான் படித்துப் பார்த்துள்ளேன். அதில் என்ன வாசகங்கள் உள்ளன என்று தெரிந்து கொண்டேன். உயிலில் என் தகப்பனார் சுயமாக கிரயம் வாங்கப்பட்ட சொத்து என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்தெந்த தேதியில் கிரயம் வாங்கப்பட்டது என்று விவரம் அதில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் என் தந்தை குறிப்பிட்டுள்ளார். வழக்கு சொத்திற்கான அசல் ஆவணங்கள் என்னிடம் இல்லை என்று சொன்னால் சரிதான். உயில் எழுதிய பிறகு என் தகப்பனாரிடம் அசல் ஆவணங்களைப் பற்றிக் கேட்டேன். அவர் என்னிடம் அசல் ஆவணங்களைக்

கொடுத்தார். அந்த அசல் ஆவணங்களை வீட்டில் இருந்து கவிதா என்பவர் எடுத்துச் சென்றுவிட்டார். அதற்கு நான் காவல் நிலையத்தில் புகார் ஏதும் அளிக்கவில்லை. உயிலில் அசல் ஆவணங்ளை ஒப்படைத்ததாக வாசகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் என் தாயார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் ெய்யும் காலத்ததில் 1ம் வாதி வழக்கு சொத்து சம்மந்தமான அசல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் சாட்சி பதில் அளிக்கவில்லை. உயில் தேதியில் என் தகப்பானருக்கு என்ன வயது என்று ஞாபகம் இல்லை. என் தகப்பனாரின் வயது குறித்து உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று ஞாபகம் இல்லை.

5. என் தகப்பனாரின் கையெழுத்தை நான் பார்த்துள்ளேன். உயில் எழுதும்போது இருந்ததாக கூறப்படும் இரண்டு நபர்களை விசாரித்தால் என் தகப்பனார் உயிலில் கையொப்பம் செய்தாரா இல்லையா என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். அவர்களை விசாரித்தால்தான் உயிலை யார் எழுதினார்கள் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். என் தகப்பனார் என்ன படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் அவருடைய கையொப்பத்தை படிக்கும் அளவிற்கு போடுவார். பி.த.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என் தகப்பனாரின் கையெழுத்து. உயில் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று கூறிய வகையில் பி.த.சா.ஆ.1 வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல. உயிலில் என் தகப்பனாருக்கு 75 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், அவரால் கையெழுத்து போட இயலாது என்று சொன்னால் அவர் தெளிவாக கையெழுத்து போடுவார்.

6. என் தகப்பனார் கிரயம் வாங்கிய 1970, 1971 மற்றும் 1977 ஆகிய வருடங்களில் வாங்கிய கிரய ஆவணங்களில் உள்ள என் தகப்பனார்

கையெழுத்துபோல் பி.த.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என் தகப்பனார் கையெழுத்து போல் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.த.சா.ஆ.1ல் ஒரு படிக்க தெரிந்தவர், படிக்கத் தெரியாதவர்போல் கையொப்பம் செய்துள்ளதாக கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உயிலை நாங்கள் தயாரித்துக் கொண்டோம் என்றாலும், அதனால்தான் உயிலை யார் எழுதினார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றால் நான் தான் விவசாயம் செய்து வந்தேன். என் தகப்பனார் இறந்த பிறகு வழக்குச் சொத்து குறித்து என் பெயரில் பட்டா மாற்றம் செய்யவில்லை. ஏன் பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால் சாட்சி பதில் அளிக்கவில்லை.

7. இன்றைய தேதிவரை பட்டா என் தகப்பனார் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். சொத்துக்கள் வாங்கிய தேதி முதல் 1ம் வாதிதான் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தான் விவசாயம் செய்து வந்தேன். நான் 1958 வருடம் பிறந்தேன். என் பெற்றோருக்கு 1957ம் ஆண்டு திருமண ஆனது என்று ஆவணம் உள்ளதா என்றால் என் தாயார் கூறியதை வைத்து கூறுகிறேன். என் தகப்பனாருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது. வழக்குச் சொத்தை கிரயம் வாங்கிய தேதி முதல் 1ம் வாதி தான் அதனை பராமரித்து கணக்கு வழக்குகள் பார்த்து வந்தார் என்றால் சரியல்ல.

8. வழக்குச் சொத்து அல்லாமல் வேறு சில சொத்துக்களை என் தாயார் அவரின் சகோதரர்கள் பெயரில் கிரயம் பெற்றுள்ளார் என்றால் இல்லை. 1ம் வாதி தன் மகள் வழி பேத்திக்கு சொத்துக்களை எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என் தாயார் ஆன 1ம் வாதி தான் இறக்கும்வரை என்னுடன் இருந்தாரா அல்லது தன் மகளுடன் இருந்தாரா என்றால் அவர் தனியாக வீடு எடுத்து தங்கி இருந்தார். நான் என் தாயாரை பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. எவ்வாறு பராமரித்தேன்

என்றால் வேலைக்கு சென்று வந்து என் தாயாருக்கு தொகை கொடுத்தேன். வாதிகள் என்ன வழக்குரை சொல்லி தாக்கல் செய்துள்ளார்கள் என்று நான் படித்துப் பார்த்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. 2ம் வாதி சற்று மன நிலை சரியில்லாதவர் என்றால் சரிதான். அவரை 1ம் வாதி தான் பராமரிப்பு செய்துவந்தார். என் தாயாருக்கு ஒரு வீடு நான் கட்டி கொடுத்து அதன் வாடகையை அவர் பெற்று வந்தார். அந்த சொத்துக்கு என் பெயரில் ஆவணம் உள்ளதா என்றால் சாட்சி பதில் அளிக்கவில்லை. அந்த சொத்திற்கான ஆவணம் கவிதா பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதற்காக தனியே ஒரு வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். என் பெயரில ஆவணம் இல்லாத வகையில் நான் எவ்வாறு அதில் வீடு கட்டினேன் என்றால் அது என் மாமாவின் சொத்து. மாமா இறந்துபோனால் அவருடைய வாரிசுகளுக்கு செல்லும் என்றால் சரிதான். எனக்கு அந்த சொத்து வராது என்றால் சாட்சி பதில அளிக்கவில்லை.

9. வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் 1ம் வாதியின் சீதன பொருட்களை விற்று என் தகப்பனாருக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை என்பதால் அவர் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் என் தாயாரை திருமணம் செய்த காலத்தில் என் தகப்பனார் பெயரில் எந்த சொத்துக்களும் இல்லை என்று சொன்னால் சரிதான். என் தாயாரை விட என் தகப்பனாருக்கு படிப்பறிவு குறைவு என்றால் சரியல்ல. அதனால்தான் என் தாயார் என் தகப்பனார் பெயரில் சொத்துக்களை வாங்கி பராமரிப்பு செய்து வந்தார் என்றால் சரியல்ல. அதனால்தான் என்னால் பட்டா மாற்ற இயலவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக உயில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

10. என் தாயார் அவரது உரிமையை விட்டுக் கொடுத்து கணவரின் பாகத்தில் பாகம் கோருகிறார் என் றால் சரியல்ல. அதனால் நான் எந்த பரிகாரமும் கோர

இயலாது என்று சொன்னால் சரியல்ல. உயில் எக்காலத்திலும் நடைமுறைக்கு வரவில்லை என்றால சரியல்ல. அதனை நானாக தயார் செய்தேன் என்றாலும், அதனால்தான் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் வாதிகள் கோரியவாறு 5ல் 4 பாகம் நான் தரவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை